## திராவிட இயக்க இதழ்கள் - 'பகுத்தறிவு'


பகுத்தறிவு

1930-களின் மத்தியில், தந்தை பெரியார் 'பகுத்தறிவு' என்ற பெயரில் இதழ் ஒன்றை நடத்தினார். அன்றைய ஆங்கிலேய அரசிடமிருந்து வந்த நெருக்குதல் காரணமாக, அதனை சில மாதங்களில் நிறுத்த வேண்டியதாகிவிட்டது.

பின்னாளில், அதே பெயரில் பெரியாரின் பாசறையிலிருந்து வந்த ப.கண்ணன் என்பவர் 1951-ஆம் ஆண்டு ஜனவரி 15 முதல் 'பகுத்தறிவு' இதழைக் கொண்டு வந்தார். இவரது இயற்பெயர் ஜெ.பி.கிருஷ்ணன். சேலம் மாவட்டம், சலகண்டபுரத்தில் பிறந்தவர். 1938-இல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது, தனது பெயரை சலகண்டபுரம் ப.கண்ணன் என்று மாற்றிக் கொண்டார். திராவிடர் கழகத்தில் இருந்த இவர், 1949-இல் தி.மு.க. தொடங்கப்பட்டபோது, அவரும் பேரறிஞர் அண்ணாவுடன் இணைந்தார்.

தமிழறிஞரான இவர், தனது 'பகுத்தறிவு' இதழை, தொடக்கத்தில் மாத இதழாகவும், 1956-ஆம் ஆண்டு ஜூலை முதல், வார இதழாகவும் வெளியிட்டார். இதழின் முன் அட்டையில், 'கழக வார இதழ்' என்ற முழக்கத்துடனேயே வெளிவந்தது. முகப்புப் பக்கத்தில் இருந்தே கட்டுரைகள் அச்சிடப்பட்டுள்ளன. 'தலையங்கம்', 'கட்டுரைகள்', 'வாசகர் கடிதம்', 'நாடகம்', 'கழகச் செய்திகள்', 'கேள்வி பதில்', 'மொழிபெயர்ப்புத் தொடர்', 'கவிதைகள்' உள்ளிட்ட பகுதிகள் அந்த இதழில் இடம்பெற்றிருந்தன.

## :ப்ளாஷ்பேக்




எஸ்..அருண்ராஜ்

### வாழ்நாள் மகிழ்ச்சி உணர்கிறோம்!

3.12.2015 அன்று எனக்கும் என் இணையர் பிரஷித்தா அவர்களுக்கும் உளுந்தூர்பேட்டையில் மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில், திருமணம் நடைபெற்றது. திருமணம் முடித்த பிறகு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றோம். கோபாலபுரம் இல்லத்தில் நாங்கள் காத்திருந்தபோது, பல தலைவர்கள் அமர்ந்த இடத்தில் நாங்கள் அமர்ந்திருந்தது பெருமிதத்தை அளித்தது. திருமண வாழ்வின் முதல் நிகழ்வாக, தலைவரிடம் வாழ்த்து பெற்றதை வாழ்நாள் மகிழ்ச்சியாக உணர்கிறோம்.

– எஸ்.அருண்ராஜ்,
மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,
கள்ளக்குறிச்சி வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இளைஞர் அணி தொடக்கமும் வழிகாட்டுதலும்!

1980-ஆம் ஆண்டு தேர்தல் பணிகளுக்குப் பின், கழகத்தின் இளைஞர் அணித் தொடக்க விழாவுக்கான வேலைகளைத் தீவிரப்படுத்தினார் கலைஞர். ஜூலை 20-ஆம் தேதி, மதுரை ஜான்சி ராணி பூங்கா திடலில் இளைஞர் அணி தொடங்கி வைக்கப்பட்ட பின்னர், சென்னையிலும் கோவையிலும் தொடக்க விழாக்களும், அணி செயல்படுவதற்கான வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. அதற்கு அடுத்த மாதமே, திருச்சியில் பொதுக்குழுக் கூட்டமும், நெல்லை மாவட்டக் கழக 6-வது மாநாடும் நடைபெற்றன.

## முதன் முதலில் 21

ந.வினோத்குமார்

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் 'திராவிட மரபு' தொடர் இது...**

# வெள்ளுடை வீரர்கள்!



இந்தியாவில் நூற்றாண்டு கண்ட இயக்கம் என்ற பெருமை திராவிட இயக்கத்துக்கு உண்டு. இன்னும் சில வாரங்களில், பவள விழா கண்ட கட்சி என்ற பெருமையை திராவிட முன்னேற்றக் கழகம் காணவுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில், பொன்விழா காணும் பெருமையை தி.மு.க. இளைஞர் அணி பெறவுள்ளது. அப்போது, கழகத்திலும் களத்திலும் அந்த அணி பல உயரங்களைத் தொட்டிருக்கும். அதற்கான ஐந்தாண்டுத் திட்டம்தான் கடந்த 20-ஆம் தேதி நடைபெற்ற, 45-ஆம் ஆண்டு விழா கொண்டாட்டங்களும் பயிற்சிகளும்!

இந்தத் தருணத்தில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணியைத் தொடங்கி, அதன் செயலாளராக இருந்தபோது தொடங்கி வைத்த மரபை நினைவுபடுத்திக் கொள்வது, நமது அடுத்தடுத்த பயணங்களுக்கு உத்வேகம் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

மறைந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள், தேசிய முன்னணியைத் தொடங்கிய போது, அதன் தொடக்க விழாவை, தமிழ்நாட்டில் நடத்த விரும்பினார். சென்னையில் நடைபெற்ற அந்த விழாவில், இளைஞர் அணி சார்பில் அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது. பயிற்சி பெற்ற ராணுவ மிடுக்கோடு நடக்கக்கூடிய பட்டாளத்தைத் தயார் செய்தோம். அதில் வெண்சீருடையிலே நடந்து வந்த இளைஞர் அணியினரைப் பார்த்து பிரதமர் உட்பட பலரும் வியந்தார்கள்.

அந்தப் பேரணிக்குப் பிறகு வந்த தேர்தலில் தான், வி.பி.சிங் அவர்கள் வெற்றிபெற்று பிரதமரானார். அப்போது தளபதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அலுவல் ரீதியாக அவர், தனது குழுவினருடன் பல மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அப்படிச் செல்லும் போது டெல்லியில் பிரதமரை அவரின் இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சந்திப்பில் தளபதி அவர்களை அன்பில் பொய்யாமொழி அவர்கள், "இவர்தான் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதல்வர் கலைஞரின் மகன். இளைஞர் அணிச் செயலாளர்" என அறிமுகப் படுத்தினார்.


மாஸ்டர் தமிழ்ப்பித்தன்

அப்போது வி.பி.சிங் அவர்கள், "இவரை எனக்குத் தெரியாதா? தேசிய முன்னணியின் தொடக்க விழா நடைபெற்றபோது, இராணுவ மிடுக்கோடு இளைஞர் அணிப்படையை நடத்தி, அதற்குத் தலைமையேற்று வந்த வீரர்தானே இவர்" என்று குறிப்பிட்டுச் சொன்னார். பின்னாளில், அந்தச் சந்திப்பைப் பற்றி நிகழ்ச்சி ஒன்றில் தளபதி அவர்கள் பேசும்போது "இது எனக்குக் கிடைத்த பெருமை அல்ல, ஒட்டுமொத்த இளைஞர் அணிக்கே கிடைத்த பெருமை" என்றார்.

இதில் என்ன சிறப்பு என்றால், கழகத் தலைவர் அவர்களை 'தளபதி' என்று முதன் முதலாக முன்மொழிந்தது, 'சமூகநீதிக் காவலர்' வி.பி.சிங் அவர்கள்தான் என்கிறது வரலாறு.

**1989-ஆம் ஆண்டு அணி வகுப்புக்குப் பயிற்சி அளித்தவர், தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் தமிழ்ப்பித்தன்.**

அந்த 1989-ஆம் ஆண்டு அணி வகுப்புக்குப் பயிற்சி அளித்தவர், தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் தமிழ்ப்பித்தன். 2001-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் கையால் சிறந்த தொண்டருக்கான 'அண்ணா விருது' பெற்று, சில நொடிகளில் மாரடைப்பால் காலமானார் அவர்.

1989-க்குப் பிறகு இளைஞர் அணியின் வெள்ளுடை அணி வகுப்புப் பேரணியானது, 'முப்பெரும் விழா', 'ஐம்பெரும் விழா', 'நெல்லை முதலாவது இளைஞர் அணி மாநில மாநாடு', 'கோவை இளைஞர் அணி மாநாடு', 'மதுரை பவள விழா 6-வது மாநில மாநாடு', 'மதுரை மண்டல மாநாடு', 'இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு', '8-வது திருச்சி மாநில மாநாடு' உள்ளிட்ட நிகழ்வுகளில் பெருமையுடன் நடைபோட்டது. இன்று வேறு பல இயக்கங்களும் இப்படியான சீருடை அணிவகுப்புப் பேரணிகளை முன்னெடுக்கின்றன.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 21

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# வடக்கு வளராது...தெற்கு தேயாது!

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு, ஒன்றிய-மாநில உறவுகளை ஆராய ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்து, இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளன '1970-களில் நடந்த மாநில சுயாட்சிக்கான சமர் அந்தச் சமயத்தில் முக்கியமான நூல்கள் வெளிவருவதற்கு, காரணமாக இருந்தது. முரசொலி மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' அவ்வகையைச் சேர்ந்த ஒன்று. இன்றைக்கு நடக்கும் சமருக்கு வலுசேர்க்கும் வகையில் வெளியாகி இருக்கும் நூல்தான் 'SOUTH VS NORTH : INDIA'S GREAT DIVIDE'. ஆர்.எஸ்.நீலகண்டன் இந்நூலை எழுதி இருக்கிறார்.

**கேரளத்தில் ஐக்கிய கேரள இயக்கமும், தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் இத்தகைய மாற்றங்களைச் சாத்தியப்படுத்தி இருப்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறார்1**




சித்தார்த்தன் சுந்தரம் மொழியாக்கத்தில் தமிழில் வெளியாகி இருக்கிறது.

இந்தியாவின் வடக்கு மற்றும் தெற்கு மாநிலங்களுக்கு இடையில் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வுகளை, இந்நூல் தரவுகளோடு பேசுபொருளாக்குகிறது. அதற்கான காரணங்களை, விளக்க முயல்கிறது. எல்லா வகையிலும் அதிகரித்துவரும் வேற்றுமைகள், இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைக்கே தீங்கு விளைவிக்கும் ஒன்றாக அமையக்கூடும் என்ற எச்சரிக்கையும் இந்நூல் மூலம் ஒலிக்கிறது.

முதலிரண்டு பகுதிகள் சமகாலப் பொருத்தமுடையவை. நிகழ்காலச் சிக்கலை அவை பேசுகின்றன. அதுவும் மக்களுக்கு மிக நெருக்கமான கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் நிலவும் வட மற்றும் தென் மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை இந்நூலின் முதல் பகுதி கவனப்படுத்துகிறது.

சுகாதாரத்தில், தென் மாநிலங்களை ஒருபுறமும் வட மாநிலங்களை ஒரு புறமும் நிறுத்திக்கொண்டால், மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருப்பதைக் காணமுடியும். இந்தியா முழுமைக்கும் நடந்திருக்கும் இத்தகைய மாற்றங்களை, ஒற்றை அளவீட்டை வைத்து மதிப்பிடக் கூடாது என்பதை இந்நூல் மூலம் கவனப்படுத்துகிறார் நீலகண்டன்.

அதிகாரக் குவிப்பு, வட மாநிலங்களின் வளர்ச்சியை மேலும் குறைக்கவே செய்கிறது. இதன் காரணமாக, இடப்பெயர்வு அதிகளவில் நடந்தேறும் அபாயமும் இருக்கிறது. தென் மாநிலங்களை நோக்கி நடைபெறும் வட இந்திய தொழிலாளர்களின் இடப்பெயர்வு, இன்றைக்கு மேற்கத்திய நாடுகள் சந்தித்துவரும் தீவிர வலதுசாரி தேசியவாதம் என்கிற சிக்கலைத் தான் நமக்கும் உருவாக்கும்.

தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் நடந்த பிராந்திய அரசியல் எழுச்சியும் மற்றும் அதனால் உருவான அரசியல் அடையாளங்கள், இத்தகைய தென் மாநிலங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்கிறார்.

கேரளத்தில் ஐக்கிய கேரள இயக்கமும், தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் இத்தகைய மாற்றங்களைச் சாத்தியப்படுத்தி இருப்பதை அழுத்தமாகத் தெரிவிக்கிறார். இந்தியா, அரசியல் விடுதலை பெற்ற சமயத்தில் தென்மாநிலங்களில் சமூக-பொருளாதார நிலை வட மாநிலங்களின் அளவுக்குத்தான் இருந்துள்ளது என்பதையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது.


உலகமே அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் காலத்தில், இந்திய ஒன்றியம் அதற்கு எதிரான திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் இந்த நூல் நிறுவுகிறது.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

547

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131